இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 - முரசு : 84 - ஒலி : 352 - திருவள்ளுவர் ஆண்டு 2057 - ஆடி 17 - ஞாயிற்றுக்கிழமை 02 ஆகஸ்ட் 2026 - திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 352 : Thiruvalluvar Year - 2057 - Aadi 17 - Sunday 02 August 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## த.வெ.க. ஆட்சிக்கு வந்ததும் முதலில் மின்வெட்டு – இப்போது பெரும் நிர்வாகக் குளறுபடியால்

# மின்கட்டணம் பல மடங்கு உயர்த்தி வசூல் ! மக்கள் கொதிப்பு !

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஆக. 2 -**

**த.வெ.க. ஆட்சிக்கு வந்ததிலிருந்து மின்சாரத்தில் தடங்கல்தான். முதலில் மின்வெட்டு, இப்போது மின்கட்டணத்தை பலமடங்கு உயர்த்தி வசூல் செய்துள்ள த.வெ.க. ஆட்சிக்கு பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர் என்று, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாட்டில், வீடுகளில் இரு மாதங்களுக்கு ஒரு முறை, மின் பயன்பாடு கணக்கெடுக்கும் பணியில், மின் வாரியப் பணியாளர்கள் ஈடுபடுகின்றனர். வீடுகளுக்கு, 100 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்பட்ட நிலையில், மே மாதம் முதல்வராகப் பொறுப்பேற்ற விஜய், 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும் என அறிவித்தார்.

அதன்படி, இரு மாதங்களுக்கு, 500 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்தும் வீடுகளில், 200 யூனிட்; 500 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்தினால், 100 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது.

### அதிக மின் கட்டணம் பொதுமக்கள் பாதிப்பு!

பல வீடுகளுக்கு வழக்கமாக வரும் மின் கட்டணத்தை விட, கடந்த மாதமும், இம்மாதமும், அதிக மின் கட்டணம் வந்துள்ளது. இதனால், நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் 50 முதல் 75 சதவிகிதம் வரை மின் கட்டணம் கூடுதலாக வந்துள்ளதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். 200 யூனிட் மின்சாரம் இலவசம் என்று கூறிவிட்டு, தாறுமாறாக மின்கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளதாக த.வெ.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

### த.வெ.க. அரசின் மெகா மோசடி

ஆட்சிக்கு வந்தால் 200 யூனிட் மின் சாரம் இலவசம் என அறிவித்துவிட்டு, ஆட்சிக்கு வந்த பிறகு மெகா மோசடியை த.வெ.க. அரசு அரங்கேற்றியுள்ளது.

200 யூனிட் இலவசம் என அறிவிக்கப்பட்டதால், மின்கட்டணம் கணிசமாகக் குறையும் என எதிர்பார்த்து காத்திருந்த பொதுமக்களுக்கு விஜய் அரசு பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. மாநிலம் முழுவதும் மின் கட்டணக் கணக்கீட்டில் பல்வேறு குளறுபடிகளை ஏற்படுத்தி, மின் கட்டணம் தாறுமாறாக வசூல் செய்யப்பட்டுள்ளது.



### “குளறுபடிகளுக்குத் தீர்வு காணும்வரை மின்கட்டணம் செலுத்த கால அவகாசத்தை நீட்டித்திடுக!”

### 50 முதல் 75 சதவீதம் கூடுதல் மின் கட்டணம்!

இந்நிலையில், நீலகிரி மாவட்டத்தில் கடந்த மே மாதத்தை விட, இம்மாதம் எடுக்கப்பட்ட மின் கட்டணம் 50 முதல் 75 சதவீதம் கூடுதலாக இருப்பதாக பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். 200 யூனிட் மின்சாரம் இலவசம் என்று கூறிவிட்டு, தாறுமாறாக மின் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளதாக த.வெ.க. அரசுக்கு பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, இம்மாதம் அதிக மின் கட்டணம் வந்த வீடுகளில், மின் பயன்பாடு கணக்கெடுப்பை மறு ஆய்வு செய்யும்படி அதிகாரிகளுக்கு, மின் வாரியத் தலைவர் அருண்ராய் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, 3.70 லட்சம் மின் இணைப்புகளில், இம்மாதத்தில் மே மாத மின் பயன்பாடுகளுடன் ஒப்பிடும் போது, அதிக வித்தியாசம் கண்டறியப்பட்டு உள்ளது.

அந்த இணைப்புகளில், தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வைப் பொறியாளர்கள், செயற் பொறியாளர்கள், துணை நிதி கட்டுப்பாட்டு அதிகாரிகள், உதவி செயற்பொறியாளர்கள் ஆய்வு செய்ய வேண்டும் எனவும் இந்த ஆய்வை ஆக., 7க்குள் முடிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (ஜூலை 31) சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவு வருமாறு:-

**“த.வெ.க. ஆட்சி அமைந்ததில் இருந்தே மின்சாரத்தில் தடங்கல் தான்...**

**முதலில் மின்வெட்டுப் பிரச்சினை, இப்போது மின்கட்டணத்தில் பிரச்சினை.**

### 3,70 லட்சம் குடும்பங்கள் மின்கட்டணம் தொடர்பாக புகார்!

**3.70 லட்சம் குடும்பங்கள் கூடுதல் மின்கட்டணம் தொடர்பாகப் புகாரளித்திருப்பதை அரசே வேறு வழியின்றி ஒப்புக்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. சமூக ஊடகங்களில் பொதுமக்களின் குமுறலைப் பார்க்கும்போது, மொத்தம் பாதிப்படைந்தவர்கள் எண்ணிக்கை இன்னும் பலமடங்கு இருக்கக் கூடும் என்பது உறுதியாகிறது.**

**இந்தக் குளறுபடிகள் ஆய்வு செய்யப்பட்டுத் தீர்வு காணப்படும் வரை, மின்கட்டணம் செலுத்துவதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட வேண்டும்.**

**இனி வரும் காலங்களில், மின்சாரப் பயன்பாட்டைக் கணக்கெடுக்கும் reading சரியான முறையில் மேற்கொள்ளப்படுவதை அரசு உறுதி செய்திட வேண்டும்.”**

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### ‘முதலமைச்சரின் தாயுமானவர்’ திட்டத்தின் பெயரும் நீக்கம்!

## ‘திராவிட மாடல்’ அரசுத் திட்டங்களின் பெயரை மாற்றும் த.வெ.க. அரசு!

### த.வெ.க. அரசின் செயலுக்கு பொதுமக்கள் கடும் கண்டனம்!

சென்னை, ஆக. 2-

‘முதலமைச்சரின் தாயுமானவர்’ திட்டத்தின் பெயரை நீக்கிய தவெக அரசுக்கு பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு பொறுப்பேற்றது முதல் எந்தவித புதிய திட்டங்களையும் செயல்படுத்தவில்லை. மாறாக முந்தைய தி.மு.க. அரசு கொண்டுவந்த முத்தான பல திட்டங்களின் பெயர்களை மாற்றியும், ஸ்டிக்கர் ஒட்டியும் விளம்பரப்படுத்தி வருகிறது.

குறிப்பாக, நான் முதல்வன், மகளிர் விடியல் பயணம், காலை உணவு திட்டங்களின் பெயர்களை த.வெ.க. அரசு மாற்றியுள்ளது. இதற்கு பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்நிலையில், முந்தைய தி.மு.க. ஆட்சியில் 70வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மட்டுமே கொண்ட குடும்பங்கள் ரேஷன் கடைகளுக்கு நேரில் சென்று பொருட்களை பெற்றுச் செல்வதில் ஏற்படும் இடர்பாடுகளை, களையும் பொருட்டு அவர்களின் வீடுகளுக்கே சென்று அத்தியாவசிய பொருட்களை விநியோகம் செய்யும் வகையில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் என்ற திட்டத்தை அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில் ரேஷன் பொருட்கள் வீடு வீடாக எடுத்துச் செல்லப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் பெரும் வரவேற்பு இருந்து வருகிறது.

இந்த நிலையில், மூத்த குடிமக்களின் வீடுகளுக்கே சென்று ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் பெயரையே த.வெ.க. அரசு நீக்கியுள்ளது. அதற்கு பதிலாக புதிதாக வேறு எந்த பெயரும் வைக்காத நிலையில் ஆகஸ்ட் மாதத்திற்கு பொது விநியோக திட்டத்தின் கீழ் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் செய்யப்படும் என குறிப்பிடப்பட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. த.வெ.க. அரசின் இந்த நடவடிக்கை முந்தைய அரசின் அரசியல் அடையாளங்களை நீக்கும் நோக்கில் இருப்பதாக மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

---

### மாணவர்கள் மீது கொடும் தாக்குதல்: உள்துறை அமைச்சர்

## அமித்ஷா பதிலளிக்கக் கோரி நாடாளுமன்றத்தில் முழக்கம்!

### இரு அவைகளும் திங்கள் வரை ஒத்திவைப்பு !

புதுடெல்லி, ஆக. 2 -

எதிர்க்கட்சிகள் முழக்கத்தால் நாடாளுமன்றம் நேற்றும் முடங்கியது இரு அவைகளும் திங்கள்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது.

மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அமித்ஷா பதிலளிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

டெல்லியில் மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து, எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டதால் நாடாளுமன்ற இரு அவைகளும் திங்கள் கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரின் பத்தாம் நாளான நேற்று, நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்பாக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து மக்களவை கூடியதும், நீட் தேர்வு ரத்து விவகாரம், டெல்லி போராட்டத்தில் மாணவர்கள் மீதான தாக்குதல், ராமர் கோயில் நன்கொடை முறைகேடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து அவையில் விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

காவல்துறையினர் நடத்திய, காட்டுமிராண்டித் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று உள்துறை அமைச்சர் அமித்ஷா ராஜினாமா செய்ய வேண்டும் என வலியுறுத்தினர். இந்த விவகாரங்கள் குறித்து விவாதிக்க மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா அனுமதி மறுத்ததால் அமளி ஏற்பட்டது.

இதையடுத்து, மக்களவையை திங்கள்கிழமை வரை ஒத்திவைப்பதாக அவர் அறிவித்தார்.

இந்த விவகாரம் மாநிலங்களவையிலும் எதிரொலித்தது. போராட்டம் நடத்திய மாணவர்கள் மீதான தாக்குதல் குறித்து அமித்ஷா பதிலளிக்க வேண்டுமென்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர். இதற்கு அனுமதி மறுத்த அவைத் தலைவர் மாநிலங்களவையை திங்கள்கிழமை வரை ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

---

### நிழலும்... நிஜமும்...

